# போர்வாள்

ர்கள்: காஞ்சி. மணிமொழியார் — தனி இதழ் அணா 1½
இளஞ்செழியன், B. A. (Hons.) — வெளிநாடு அணா 2

சென்னை 20—12—47 சனிக்கிழமை — வீச்சு 19


## ஏது புண்ணியம்?

(எஸ். ஏ. நடராசன்)

கடவுளின் பெயரால் கணக்கிலா மனிதர்
குடங்குட மாகக் கோயில் தன்னில்
பரமன் மீது பாலினை ஊற்றி
அரகர என்று அரற்றலை நீங்கள்
புண்ணியம் என்று புகல்வீர் தாமோ?
அண்மை யிலுள்ள அழுகிலாக் குடிலில்
பசிக்கும் போது பருகப் பாலும்
விசிக்கும் போது வேண்டிய நலனும்
இன்றியே நோயுடன் இன்னலை அடையும்
சின்னஞ் சிறுவர் சுகமுறப் பாலினை
அளித்தால் புண்ணியம் அடைதல் அரிதோ?
அளித்தால் பாவம் அடைந்தே தீருமோ?
மன்பதைத் தொண்டே முன்னவன் தொண்டெனப்
பன்னும் பனுவல் பற்பல உரைப்பீர்
கருணை மூர்த்தி, ஏழை பங்காளன்,
கவல்வார் கவலை தீர்க்கும் அருளாளன்
என்றெலாம் கவிதை எழில்படப் புனைவீர்
எனினும் அவன் பொருள் ஏழைக்கருள
ஏனோ தயக்கம், ஏனோ நடுக்கம்?

## 144

சென்னை அரசியலார், சென்னை செங்கற்பட்டு அரசாங்க ஊழியர்க்கு 144 போட்டுள்ளனர் பொதுக்கூட்டங்கள் நடத்தக் கூடாதென்று!

வடநாட்டுக் காங்கிரஸ் தென்னாட்டுக் காங்கிரசுக்கு 144 போட்டிருக்கிறது, தான் கிழித்த கோட்டைத் துளியளவும் தாண்டிப்போதல் ஆகாதென்று!

நண்பர் ம. பொ. சிவஞானம் தன் "தமிழ் முரசு" இதழில் 144 போட்டிருக்கிறார் வீரர் வ. உ. சி,யின் புகழை மாற்றுக் கட்சியினர் பரப்புவது மன்னிக்க முடியாத குற்றமென்று!

பள்ளிக்கூட உரிமையாளர் பலர் தம் தமிழாசிரியர்கட்கு 144 போட்டுள்ளனர் பகுத்தறிவுப் பிரசாரம் புரியக் கூடாதென்று!

புராணங்களும் இதிகாசங்களும் நீண்ட நாட்களாகவே தமிழ் மக்களுக்கு 144 போட்டு வருகின்றன, சிந்திக்கத் தொடங்குவது மாபாதகம் என்று!

"கல்கி" "சுதந்திரா" இதழாசிரியர்கள் 144 போட்டுள்ளனர் தத்தம் பேனா முனைகளுக்கு, மறுபடியும் பெரியாரையும் அண்ணாதுரையையும் மறந்தாற்போல் பாராட்டித் தொலைக்காதே என்று!

காமராஜர் தன் "நா"வினுக்கே 144 போட்டிருக்கிறார் பழைய நினைவில் ஆச்சாரியாரைத் தூற்றிவிடப் போகிறாய்—ஜாக்கிரதை என்று!

அமைச்சர் அவினாசியார் 144 போட்டிருக்கிறார் திருக்குறள்—காமத்துப் பாலுக்கு!

அடடாவோ அடடா! சர்வம் 144 மயம்!




[சென்ற இதழின் தொடர்ச்சி]

கௌரியின் தந்தையோடு பேசுவதற்காக உள்ளே நுழைந்தேன். வீட்டில் நுழையும்போது அவளுடைய அண்ணி என்னைப் பார்த்து ஏளனமாகச் சிரித்துக்கொண்டு போனதைக் காண எனக்கு எப்படியோ இருந்தது. அப்போது தற்செயலாக கௌரியை நான் பார்க்க நேர்ந்தது. அவள் முகத்தில் புன்னகை இல்லை. கண்களில் இயற்கையாகத் தோன்றும் அந்த இன்ப நளினமில்லை. கன்னங்களில் கண்ணீர் வழிந்தோடிய அடையாளம் மட்டும் இருந்தது.

உள்ளே சென்றதும் உட்கார்ந்தேன். சுந்தரம் ஐயர் நிமிர்ந்து பார்த்தார்; அவருடைய முகம் கோபத்தால் சிவந்தது அதைக் காண என் உள்ளமும் நடுங்கியது. இந்த நடுக்கம் எனக்கே வியப்பைத் தந்தது.

அதிகம் வளர்த்துவானேன்! அவர் கூறியது இதுதான்: "—நீ யோக்கியமானவன் என்று எண்ணி, குடும்பத்துடன் சகஜமாகப் பழகவிட்டேன்—அது பாலுக்குப் பூனையைக் காவல் வைத்ததுபோலாயிற்று. போனது போகட்டும்; இனி இந்த வீட்டுப் பக்கம் நீ கால் எடுத்து வைக்கவேண்டாம்..." என்றார். பதில்பேச வாயெடுத்தேன்.

"—எனக்குத் தெரியும் நீ கூறப்போவது. இது மேடையல்ல—பிரசங்கத்திற்கு. பேசாமல் போய்வா!" என்றார்.

ஏமாற்றம், வெட்கம், தோல்வி எல்லாம் சேர்ந்து துன்புறுத்த, குனிந்த தலை நிமிராமல் நடக்கத் தொடங்கினேன்.

வரும்போது கௌரி கதவிற்கு அருகாமையில் நின்றிருந்தாள். அவள் கண்களில் ஓடிய நீரிலிருந்து உரையாடல் முழுமையும் கேட்டிருந்தாள் என்று தெரிந்தது. அவளுடன் பேசுவதற்காக சற்றே நின்றேன். இதற்குள் அவள் அண்ணி, கௌரியின் கையைப்பற்றி அழைத்துக் கொண்டுபோய் விட்டாள். ஆனால் கௌரியினிடமிருந்து வந்த விம்மல் ஒலியை மட்டும் தடைப்படுத்தாமல் விட்டு விட்டாள் போலும். அது பல கெஜம் தூரம்வரை நன்றாய்க் கேட்டுக் கொண்டிருந்தது வெளியே சென்று கொண்டிருந்த எனக்கு. அந்த வருடம் பி. எ. வகுப்பில் நான் தேர்ச்சியடையவில்லை. ஆனால் அதுவே காதல் என்பது என்ன என்பதில் தேர்ச்சி பெறுவதற்கு ஏதுவாயிருந்ததால் ஒருவித ஆறுதலும் ஏற்பட்டது.

மனம் உடைந்த எல்லோருக்கும் எல்லாமும் சூன்யமாகத் தோன்றுவதுபோல எனக்கும்

சூன்யமாகத்தான் தோன்
ஆனால் தற்கொலை
கொள்ளவேண்டும் அ
ஊரை விட்டு நாடோ
(கதைகளில் வருவது
ஓடிவிட வேண்டும் எ
லாம் நான் எண்ணவில்லை
வாழ்க்கையில் காதலுக்
உயர்ந்த இடத்தை நான்
தது உண்மையே. ஆனால்
என்னைக் கைவிட்ட
அதற்காகத் தாடி வள
கொண்டு 'ராம்துன்'
வெண்டும் என்றோ,
வாழ்க்கையை அடியோ
ந்துவிட்டு காட்டிற்கு
வேண்டுமென்றோ, அ
போக முயற்சிப்பதாகப்
உணர வேண்டுமென்றோ
எண்ணவில்லை இப்படி
வதை விவேகமானதாக
கருதவுமில்லை.

ஆனால் ஒன்று. அந்த
காயம் பலமானதுதான்,
மறக்க எனக்குத் தைரிய
ஆனால் அது தீறி
கொள்ள முடியாத கா
என்பதைத்தான் நான்
பிட விரும்புகிறேன்.

## 6

அடுத்த ஆண்டு! எங்கள்
ரித் தமிழ் மாணவர் கழ
சார்பில் நாடகம் ஒன்று
பட்டது. நாடகம், கழ
நிதி சேர்ப்பதற்காகத்தான்
தப்பட்டது. இந்த நாட்
கள் கோயில் கட்டுவதற்
ஆயிரக் கணக்கில் பொ
முன்வருகின்றனரே தவிர
வளர்ச்சிக்காகவோ மக்க
னேற்றத்திற்காகவோ, கல்
தற்காகவோ செல்லாத கா
ஒப்புவதில்லையே! என
நாடகக் கலையை நாக்க
வேண்டியதாயிற்று—
ரூபா அணா பைசா அ
தயவைச் சம்பாதிக்க!

நாடகம் எங்கள் கல்லூரி
வன் ஒருவனாலேயே எ
ஒரு சோக சித்திரம்.

வனும் ஒருத்தியும் காதலிக்
னர், இவர்களுக்குத் திரு
ம்செய்து வைக்க பெண்ணின்
ரோர்களுக்குச் சம்மதமே;
ப் பிள்ளையின் தந்தைக்கு அது
டு பிடிக்கவில்லை. காரணம்,
ணின் தாய் விதவையாய்
து பிறகு மறுமணம் செய்து
ன்டதினல் இறந்தவள் என்ற
ங்கம்" உடையவள். பெற்
கட்டுப்பாடு என்னும் கை
கை மாட்டிக் கொண்டு, காத
மேல் படிப்பிற்காக ஊரை
போய் விடுகிருன். நாளுக்கு
காதலனைப் பிரிந்ததால் ஏற்
மனநோயினல் பீடிக்கப்
இறக்கும் தறுவாயிலிருக்கி
பெண்.
ன் மீண்டும் திரும்பி ஊர்
சேர்கிருன், அவளைப் பற்றித்
து கொள்ள வேண்டும்
வந்ததும் வராததுமாய்ப்
வீட்டிற்கு வருகிருன். எதி
அவளுடைய பிணம் ஊர்வல
கொண்டு செல்லப் படுவதைக்
அதிர்ச்சியுடன் நிற்கிருன்.
டன் நாடகம் முடிவுறுகிறது.
கதைக்கு "காதல்—பலி
ல்" என்று பெயர்.
நண்பர்கள் என்னையே
நாயகனுக நடிக்க வேண்டு
று வற்புறுத்தி ஒப்புக் கொள்
செய்தனர். முதலில்
கு, கதையின் போக்கு
கவில்லை. ஆனல் அதே சம
சமூகக் கட்டுப் பாட்டினல்
ன ஒரு அனுதாபத்துக்குரிய
ணின் கதை இதுஎன்ற நினை
ன்னை நடிக்கத் தூண்டிற்று.
நினைத்தேன் :—ஒருக்கால்
நாடகத்தினல் நன்மையும்
லாம்; கௌரியின் தந்தை
நாடகத்திற்கு வந்து
து ஒரு வேளை மனம் மாறி
கு கௌரியை..................!
னிதன் எவ்வளவு சுயநலப்
க இருக்கிருன்! ஒவ்வொரு
லும் நுழையும் போது அத
னக்கு ஏதாவது பயன் ஏற்
என்று எண்ணுகிருனே
ன்னலமின்றி எந்தச் செய
து ஈடுபடுகிருனு?
ல் வெளிக்கு மட்டும் பொது
ருதியே உழைக்க வேண்டு
கூச்சல் போடாத மனிதன்
இருக்கிருன்?
கத்திற்கு ஒரு மணி நேரம்
மேயே எனக்கு வேஷமெல்

லாம் போட்டுவிட்டதால் 'மேக்அப்' அறைக்கு வெளியே நின்று கொண்டு யார் யார் உள்ளே நுழைகிருர்கள் என்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தேன்; யாருடைய வரவையோ எதிர் பார்த்து ஏங்கித் தவித்தன என் கண்கள். நாடகம் ஆரம்பமாகி முதல் அங்கம் முடிந்தது. அடுத்தது என்னுடையது. நாடக மேடைக்குள் நுழைந்தேன். நுழைந்ததும் என் நண்பர்கள் எல்லோரும் கை தட்டி ஆரவாரம் செய்தனர். நாலாபுறமும் கண்களை ஓட்டினேன். ஒரு புறம் கௌரியும் அவள் அண்ணியும் ஒன்ருக உட்கார்ந்திருக்கக் கண்டேன். அவர்களுக்கு முன் வரிசையில் சாமிநாதனும் அவன் தந்தையுமிருக்தனர். அதைக் கண்டதும் இன்னதென்று கூறமுடியாத ஓர் உணர்ச்சி மின்சாரம் பாய்வது போல என் உள்ளத்தில் பாய்ந்து என் உடம்பை ஒரு குலுக்கு குலுக்கிற்று. இந்த உணர்ச்சி வெள்ளத்தில் நீந்திக் கிடந்ததால் நடிப்பதை மறந்து நின்ற என் கால்களை நாடகத்தில் கதாநாயகி வேடம் தரித்தவள் ஒரு மிதி மிதித்து, "எங்கேயோ பார்த்து நிற்கிறீர்களே! உங்கள் போர்ஷன் மறந்து விட்டதா என்ன" என்ருள். பிறகு சுய உணர்வு கொண்டு விட்டேன். நாடகம் முடிந்ததும் எல்லா நண்பர்களும் விழுந்தடித்துக் கொண்டு என்னைப் பிரமாதமாகப் புகழ ஆரம்பித்தனர். எல்லோரும், கடைசியில் கதாநாயகியைப் பிணமாகச் சுமந்து செல்லும்போது நடித்ததுதான் மிகவும் மெச்சத் தகுந்தது என்ருர்கள்.

அவர்கள் சொன்னது உண்மைதான். நாடகத்தில் அந்தக் கட்டம் வந்த போது என்னையறியாமல் என் கண்களில் நீர் வழிந்தோடியது. திரும்பி கௌரி அமர்ந்திருக்கும் பக்கம் நோக்கினேன். அவளும் கண்களைத் துடைத்தவாறுதானிருந்தாள்.

இதற்குள் சாமிநாதனும் கௌரியும் வந்தனர். சாமிநாதன் என் கைகளைக் குலுக்கி விட்டு என்னை மிகவும் புகழ்ந்தான். கௌரியை ஏறெடுத்துப் பார்ப்பதற்கே எனக்கு வெட்கமாயிருந்த காரணத்தால் அவளைக் கவனிக்காதவன் போலப் பேசிக் கொண்டிருந்தேன். திடுமென யாரோ காலை மிதிப்பது போலத் தோன்றவே காலைப் பார்த்தேன். கௌரிதான் காலை வேண்டுமென்றே மிதித்தாள் என்று தெரிந்தது.

நாடகத்தில் என் நடிப்பைமறந்து நான் நின்றபோது கதாநாயகி என் கால்களை மிதித்தாள்-என்னை நினைப்பூட்ட. ஆனல் இப்போது கௌரி ஏன் என் கால்களை மிதித்தாள்? நான் எதை மறந்து விட்டேன் அவள் நினைப்பூட்ட? தலை நிமிர்ந்து பார்த்தேன். புன் சிரிப்புடன் என் காதலி விடை பெற்றுச் சென்று கொண்டிருந்தாள் தன் அண்ணன் அண்ணி அப்பா புடை சூழ. அதே சமயத்தில் என் கால் விரல்களுக்கிடையே ஏதோ ஒன்று சிக்கிக் கொண்டிருக்கக் கண்டு என்ன வென்று எடுத்துப் பார்த்தேன். கடிதம்! கௌரி எழுதிய கடிதம்! என் கால்களை மிதித்தபோது அவள் அங்கே போட்டிருக்கிருள் அக் கடிதத்தை.

எல்லோரும் சென்ற பிறகு அவள் நழுவ விட்டுச் சென்ற கடிதத்தைப் பிரித்துப் பார்த்தேன். அதில் என்னென்னவோ வெல்லாம் எழுதி இருந்தாள். எழுத்தினை விழிகள் தாவ இதயத்தால் வாசிக்கலானேன். அவள் தன் உள்ளத்தையே பிழிந்தெடுத்துத் தந்துவிட்டிருந்தாள் அக் கடிதத்தில். படித்துக் கொண்டே போனேன். எண்ண எண்ண இன்ப வெள்ளத்தில் ஆழ்த்திய பழங்கால நினைவுகள் — எதிர்காலத்தைப் பற்றிய புதுப்புது கனவுகள் — சிந்தனையைத் தூண்டில் போட்டு இழுக்கும் பல நெருக்கடிகள் இவை யெல்லாம் நிரல் நிரலே கிளர்ந்தெழுந்தன உள்ளத்தில்.

கடைசி வரிக்கு வந்தேன். அடுத்த நாள் மாலை கடற்கரையில் என்னைக் கட்டாயம் சந்திக்கும் படியாய்க் கேட்டிருந்தாள்.

அதைப் படித்தவுடன் மனம் ஒரே குழப்பத்தில் ஆழ்ந்துவிட்டது. என்ன சொல்ல நினைத்திருக்கிருளோ! ஒருகால் "இனி நாம் இந்தப் பிறவியில் ஒன்ருய்ச் சேருவதென்பது முடியாதசெயல்.ஆகையால் நாம் ஒருவரையொருவர் மறந்திடுவோம்..." என்று கூறிடுவாளோ! இப்படியெல்லாம் மனதில் சிந்தனை அலைகள் மோத ஆரம்பித்தன.

* * *

கடற்கரையின் வெண் மணலில் தனியாயிருந்தாள் கௌரி. அவளுடைய நெற்றியில் ஓடிக்கொண்டிருந்த கீறல்கள் உள்ளக் குமுறலின் உருவெளியோ என்றெண்ணினேன். கேட்டேன், 'ஆம்' என்றாள். நாவல்களிலே தலைவன் தலைவி இருவருக்கும் வருகிற நெருக்கடியான கட்டத்தில்தான் அப்போது நாங்களும் இருக்கிறோம் என்பது எனக்கு உடனே நன்றாகத் தெரிந்துவிட்டது. நெருக்கடியைத் தீர்க்கும் வழியும் ஒரே வினாடியில் புலப்பட்டுவிட்டது. அதுவும் நாவல்களில் காணப்படும் பழைய பழக்கமான வழிதான்—எங்கேயாவது இருவரும் ஓடிவிடுவதென்ற வழி!

இந்த முடிவுக்கு நாங்கள் வந்தபோது எங்கள் இருவர் உள்ளமும் மகிழ்ச்சியினால் துள்ளி விளையாடத் தொடங்கின.

இன்னும் நான்கு நாட்களுக்குள் மறைந்துவிடப் போகிறோம். எந்தச் சமூகம் எங்கள் வாழ்க்கையின் இலட்சியத்தை உணர மறுத்ததோ—நாங்கள் வாழ்க்கையில் ஒன்று சேருவதைக் காணச் சகியாது கசந்ததோ அந்த மக்கள் கூட்டத்தை விட்டே ஓடிவிடப்போகிறோம்.

கௌரி எனக்காக எவ்வளவு பெரிய தியாகம் செய்ய முன் வந்திருக்கிறாள்!

தியாகத்தைப் பற்றி எண்ணும் போதெல்லாம் எனக்கு ஒரே குழப்பமாய் விடுவது வழக்கம்.

ஒரு முதலாளி ஏழைகளின் வயிற்றில் அடித்தோ, அவர்களின் ரத்தத்தை உறிஞ்சியோ இன்னும் எந்த எந்த விதமாகவோ பணத்தைச் சேர்த்துவிடுகிறான் (பூர்வ ஜன்ம புண்ய வசத்தால்-?) இவன் அடிக்கும் கொள்ளைக்கு நாகரிக அகராதியில் வியாபாரத் தந்திரம் என்று பெயர். முதலாளியால் சுரண்டப்பட்ட ஒருவன் — பாட்டாளி — வயிற்றுக்கில்லாத கொடுமையால் ஒரு ரொட்டித் துண்டைத் திருடிவிடுகிறான்-இதற்கு கிரிமினல் சட்டப் பிரகாரம் திருடு என்று பெயர்.

இந்த இரு இனத்தவர்க்கும் தேசபக்தி வந்துவிடுகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். ஏதோ கூச்சல் போடுகிறார்கள்—அல்லது சாத்வீக முறையில் அரசாங்கத்தாரை எதிர்க்கிறார்கள். சர்க்கார் இருவரையும் தேசப் பாதுகாப்புக்கு விரோதமானவர்கள் என்று குற்றம் சாட்டி சிறைக்கு அனுப்பி வைக்கிறார்கள். தண்டனை முடிந்து வெளிவருகிறார்கள்.

முதலவன்—முதலாளி, வெளிவரும்போதே ஒரு பெரிய கூட்டம் 'ஜே' போட்டுக்கொண்டு மாலையோடு வாசலில் காத்திருக்கிறது "தியாகி"யை வரவேற்க.

பின்னவன் — பாட்டாளி, நாட்டின் விடுதலைக்காக வேண்டி சிறையில் இருந்தோம்—கஷ்டப்பட்டோம் மக்களுக்காக என்ற பெருமிதத்துடன் வெளிவருகிறான்.

அவனைப் பற்றி யாருக்கும் ஒன்றுமே தெரிவதில்லை. பத்திரிகையில் கொட்டை யெழுத்தில் அவன் பெயர் வருவதில்லை. மாலை போட்டு வரவேற்க வேண்டிய அளவிற்கு அவன் ஒரு 'தியாகி'யாக யாருக்கும் தோன்றுவதில்லை. எப்படி அடிச்சுவடு தெரியாமல் மௌனமாக — நாட்டின் விடுதலைக்காக உள்ளே புகுந்தானோ அப்படியே யாரின் கவனத்தையும் கவராமலேயே வெளியேறி, சமுதாயத்தின் கோடிக்கணக்கான பேர்களோடு கலந்துவிடுகிறான்.

இதில் யார் 'தியாகி?'

ஒரு சௌகரியத்தையும் துறக்காமல் முதல் வகுப்பில் காலத்தைக் கழித்துவிட்டு வந்தவனா?

மூன்றாம் வகுப்பில் சொல்லவொண்ணாத் துயரை அனுபவித்துவிட்டு வந்தவனா?

ஆனால் பெண்ணின் தியாகம்—தான் இறந்தாலும் கவலையில்லை—தன் உதிரத்தில் உதித்த குழந்தையைக் காப்பாற்றுங்கள் என்று கூறும் தாய்மையின் தியாகம்—?

ஒரு பெண்ணின் நிலையை எடுத்துக் கொண்டால், அவள் முன்பின் அறியாத ஒருவனுடன் — அவன் எந்த மாதிரியான குணம் உடையவனோ அறியாள் அவள்; அவன் பெண்ணின் எண்ணத்திற்கு வணக்கம் செலுத்துபவனாகவும் இருக்கலாம்; அதனை மிதித்துத் துவைப்பவனாகவும் இருக்கலாம்—தன் வாழ்க்கை அவனால் மலரும் என்ற ஒரே நம்பிக்கையின் மீது தான் குதூகலமாக அவனுடன் கைகோத்து நிற்கிறாள்; வாழ்க்கைப் பாதையை நோக்கி
எடுத்து வைக்கிறாள். பின்
அவன் காமி யென்று தெரிந்
வெளியில் சொல்லாமல் தன் ம
சாட்சியையே கொன்று கொ
மௌனமாகமே குடும்பத்
வாழப் பழகிக் கொள்கி
அவன் குடிகாரனாக இருந்
அடியும் உதையும் பட்டுக்கொ
குடிகார அப்பனின் பாவ
தன் மக்கள் மீதாவது விழ
இருக்கட்டுமே என்பதற்காக
வளவோ இன்னல்களை வாய்
காமல் ஏற்றுக் கொள்கிறாள்.
இந்தத் தியாகம் எப்படி
டது?
இதில் எது உயர்வானது?
கௌரியைத்தான் எடுத்
கொள்வோமே, நானே எல்
என்று நம்பி தன் பெற்றோரை
மற்றைய உடன் பிறந்தவர்களை
விட்டு விட்டு வந்துவிட துணி
நிற்கின்றாள். நான் அதை ஏ
மல் விட்டு விட்டாலோ?
கொஞ்சம் நாட்கள் பார்ப்
மீண்டும் ஏற்றுக்கொள்ள
வேன் என்று. ஆனால் என்
றும் எதிர்பார்க்க முடியுமா?
நிலையும் இயற்கையும் கட்ட
அதற்கு இடம் தராது. கடைசி
'விதியே' என்று, அல்லது 'ஏ
றமே' என்று, யாருக்காவது
வியாகப் போய்விடுவாள்.
எல்லாம் துக்கமாகவே தோன்
என்பது மெய்தான். ஆனால்
லாம் மகிழ்ச்சியாயும் தோன்
ஒன்று உண்மை, போகப்
புதிய சூழ்நிலை பழகிவிடும். க
என்பதும், காதல் மணம் எ
தும், வாழ்க்கைத் துணை நலம்
பதும், ஒன்றுபட்ட உள்ளங்க
இன்பபுரிப் பயணம் என்
அன்றன்றுட வாழ்க்கை
காணக்கூடியது என்ற என்
சிறிது சிறிதாக மறைந்து, அ
யெல்லாம் கதைகளிலும் கா
களிலும் கற்பனை உலகிலும்
டுமே காணக்கூடிய மயக்க
தைகள் என்ற உறுதி ஏற்
விடும்.

* * *

"என்ன சிந்திக்கிறீர்கள்!
போய்விட வேண்டியதுதா
வேறு வழி ஏதேனும் இருக்கிற
என்றாள் கௌரி. போட்ட
டத்தை நிறைவேற்றிவிட வே
டியதுதான். வேறுவழி ஏத
றேன் நான்.
(தொட

# சிந்தனைச் சிற்பி இங்கர்சால்

[மா. இளஞ்செழியன்]

உண்மையே உலகத்தின் அறி
கருவூலம். உண்மையை ஒளி
ச் செய்வதே உலகத்தில்
ள தொழில்கள் அனைத்தினும்
ந்தது.

உண்மையே முற்போக்கு என்
கட்டிடத்தின் அடிப்படை,
ழவாயில், சுற்றுச்சுவர், மாடி;
் எல்லாம்.

உண்மையே ம கி ழ் ச் சி யி ன்
னே. உண்மையே மக்களை
லாராக, அ றி வி ன் திறம்
ர்ந்தவராக, தூய்மை நிறைந்த
வினராக உருவாக்குகிறது.

உண்மையே நமக்குரிய போர்
; உண்மையே நம் கேடயம்.
த 'ஆத்மா'வின் புனிதமான
யும் அதுவே.

ற்பணி ஆற்றுதற்குரிய பேரா
முழுவதும் உண்மையினிட
தே பிறந்து வளர்கின்றன.
மையே மிகப் பெரிய சக்தி.
மையொன்றைக் கண்டுபிடிப்
அறிவின் திருவிளக்கொன்
ற்றுபவனாகிறான்.

ண்மையைக்கண்டறியவேண்
ன்பதைக் காட்டிலும் சிறந்த
சியம் வேறென்ன இருக்க
ும்? மனித வாழ்க்கையின்
கும் நெடுக்கும் பாய்ந்து
ின்ற பல்வேறு எதிர்ப்புச்
கள், இடர்ப்பாடுகள், பிழை
எண்ணங்கள், இருண்டு
ா தத்துவங்கள் இவற்றிற்
யே, ஒளிவீசும் உண்மை ஒன்
காண முயல்வது எவ்வளவு
புடையது!

ண்மை எப்போதும் பரந்த
வளிகளையும், சிறப்பான
களையும், நிறைந்த ஒளிச்
களையுமே விரும்புகிறது;
மறைவுகளை விரும்புவதே
யாது.

ண்மை, மனிதனை நமஸ்கா
செய்யச் சொல்லவில்லை;
பிட்டுத் தாழ்ந்து வணங்கச்
லவில்லை; தாழ்ந்து தாழ்ந்து
னும் தாழ்ந்து போ என்று
பிடவில்லை. 'மனிதா! நீ நகர்ந்து போ; நீ ஊர்ந்து போ' என்றெல்லாம் அது கட்டளையிடுவதில்லை.

"மூடர்களின் அபிஷேகத்தையோ, பயங்காளிகளின் பிரார்த்தனைகளையோ, உண்மை, ஒருபோதும் விரும்புவதில்லை"

"உண்மை ஒவ்வொரு மனிதனையும் பார்த்துச் சொல்வதெல்லாம் 'சிந்தித்துப் பார்; நீயே சிந்தித்துப் பார்; எதற்கும் எவர்க்கும் அஞ்சாது சிந்தித்துப் பார்' என்னும் இந்த வாசகங்களைத் தான்.

"நான் சொல்கிறேன், தன்னால் முடிந்த அளவுக்கு-தனக்கு விருப்பமுள்ள அளவுக்கு எதனையும் ஆராய்ச்சிக் கண் கொண்டு அலசிப் பார்க்க ஒவ்வொரு மனிதனுக்கும் முழு உரிமை இருக்கவேண்டும். உலக இலக்கியங்கள் அத்தனையும் அவன் முன் கிடத்தப்பட வேண்டும்-எதுவும் மறைக்கப்படக் கூடாது. எதையும் படிக்கத் தடை இருக்கக் கூடாது. மனிதன் அறியக்கூடாத அவ்வளவு தெய்வீக சக்தி வாய்ந்த புத்தகம் எதுவுமே உலகிடை இல்லை.

"நான் மறுபடியும் சொல்கிறேன், எதனையும் அச்சம் தயை தாட்சண்ணியமின்றி சிந்தித்துப் பார்க்கவும், சிந்தனையின் முடிபுகளை அஞ்சாதுரைக்கவும் அனைவர்க்கும் உரிமை உண்டு.

"எதனையும் தாராளமாகச் சிந்தித்து முடிவு கட்டிய பாவத்திற்காக இந்த உலகிலோ அல்லது மேல் உலகிலோ ஒரு மனிதனுக்குத் தண்டனை உண்டு என்று சொல்லி மிரட்டுபவன் மனித சமுதாயத்தின் முதல் பகைவன். ஆனால், "பேரின்பம்" எனும் வீட்டுப் பேற்றைக் கைக்கூலியாய்க் கொடுத்து மக்களின் சிந்தனையைத் தடுப்பவனே ஒரு துரோகி; வஞ்சகன்; வன்னெஞ்சக் கள்ளன். ஏனெனில், இப்படியெல்லாம் மக்களின் சிந்தனையைச் சிறைப் படுத்திவிட்டால், உண்மையான ஆராய்ச்சி எப்படி நடைபெறமுடியும்? பகுத்தறிவு என்னும் விடுதலைக் கதிரவன் இல்லையேல் எந்த உண்மைதான் எப்படி வெளிப்படும்?

"ஒவ்வோர் உள்ளமும் ஓர் ஆய்வு கூடம். அங்கே ஒவ்வொரு மனிதனும் அமைதியாக இருந்து, பெரும் பெரும் தத்துவங்கள் என்று சொல்லப்படுபவற்றையெல்லாம், **தானே தனக்காகவே** ஆராய்ந்து பார்க்க வேண்டும். அவனுடைய பகுத்தறிவின் வழிப் பிறந்த உண்மை ஒன்றே அவனுக்கு வழிகாட்டியாக, குருவாக, ஞானாசிரியனாக இருத்தல் வேண்டும்.

"இவ்வண்ணம் உண்மையை உணர்ந்து அதன் வழி செல்வது ஒன்றே உயர்ந்த பண்பாடு—ஒப்பற்ற இலட்சியம். அதுவே உண்மை மனிதத்தன்மை, மெய்யான விடுதலையும் அதுவே."

* * *

இவை புரட்சித் தலைவர் பெரியார் இராமசாமியின் பேச்சுத் தொகுப்பிலிருந்து திரட்டி எடுக்கப் பட்ட சிந்தனைச் செல்வங்கள் என்றுதானே எண்ணுகிறீர்கள்? அல்ல! **இங்கர்சால்** என்னும் அமெரிக்க அறிஞன் பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆற்றிய அறிவுரைகளெனும் தேன் கூட்டின் கண்ணறைகள். இங்கர்சால் வீசிய இவ் வாசகங்களைப் படிக்கும் போது நம்மையறியாமலே நம் உள்ளம் பெரியார் இராமசாமியிடம் சென்று விட்டுத்தான் வருகிறது. காரணம், ஈ. வெ. ரா. உள்ளம் வேறு—இங்கர்சாலின் எண்ணம் வேறு என்று கூறுதற்கியலா வண்ணம், பல முனைகளில் இருவர் கருத்துகளும் ஒன்றுடன் ஒன்று கை கோத்துக் கொண்டு செல்கின்றன. ஆம்! இங்கர்சால் அமெரிக்க நாட்டுப் பெரியார் இராமசாமி எனத்தகும் பெற்றி வாய்ந்தவர். பழங்காலக் கட்டுப் பாடுகளை உடைத்தெறிய வேண்டும் என்பதில் அவர்க்குள்ள ஆவேசம், மூட நம்பிக்கைகளின்

(8-ம் பக்கம் பார்க்க)

போர்வாள்

20—12—47 சனிக்கிழமை

# உள்ளே வா!

அல்லது

# வெளியே போ!

வேலை நிறுத்தம் செய்துள்ள அரசாங்க ஊழியருட் பலர் தத்தம் அலுவலகங்களின்முன் கூட்டங் கூட்டமாகக் கூடிநின்று பேசிக்கொண்டிருக்கக் கண்ட சில அதிகாரிகள், "ஒன்று உள்ளே வந்து வேலை செய்யுங்கள்; இல்லையேல் பேசாமல் வெளியே போய்விடுங்கள்" என்று கூறினராம். சிற்றுண்டிப் பொட்டலங்களுடன் வந்திருந்த ஊழியர்களும் மரத்தடியில் அமர்ந்து அதை 'ஒழித்துக் கட்டிவிட்டு' தத்தம் வீடுபோய்ச் சேர்ந்தனராம். நாளிதழ்கள் சில, தரும் சேதி இது.

அரசாங்க அதிகாரிகள் மட்டுமல்ல, அரசாங்கமே கூட இன்றைய தினம் ஓயாமல் ஒலித்துவரும் தாரக மந்திரம் "உள்ளே வா அல்லது வெளியே போ" என்பதுதான். என். ஜி. ஓ. க்கள் — அதாவது அரசியலாரின் நடுத்தர ஊழியர்கள் — குறைந்த ஊதியம் பெற்றுக்கொண்டு, காலை முதல் மாலை வரை, ஏன், அதற்குப் பின்னருங்கூட, "ஆபீஸ்" கட்டுகளைத் தூக்கிக்கொண்டு, வீடு சென்று, உழைத்துத் தீரவேண்டிய கட்டாயத்தில் உள்ளவர்கள் தங்கள் ஊதியத்தைச் சிறிது உயர்த்தவேண்டும், பஞ்சப்படியைக் கொஞ்சம் கூட்டித் தரவேண்டும் என்று அரசியலாரைக் கேட்டுக் கொண்டபோது, அரசியலார் தந்த பதில் உள்ளே வா அல்லது வெளியே போ என்னும் இதே வாசகந்தான்.

அவர்கள் கேட்டது நேர்மையா, அல்லவா-அதைக் கவனிக்க வில்லை ஓமந்தூரார் ஆட்சியினர்.

வாழ்க்கைப் புள்ளி 202 ஆக இருந்த போது ஏற்படுத்திய அதே ஊதியத்தை அது, 303 ஆக உயர்ந்துவிட்ட இந்நாளிலும் தருவது முறைமை அல்லதான். ஆனால் அதை நினைத்துப் பார்க்க நேரம் இல்லை தேசீய சர்க்காருக்கு.

வாழ்க்கைச் செலவுக்கே போதாத சிறு ஊதியமே பெறுவராயின், ஊழியர்கள், "மேல் வரும்படி" தேடவே செய்வர்; அதுவே இயற்கை; அதைத் தடுப்பதும் அரிது; என்றாலும் ஊழியர்தம் ஊதியத்தை உயர்த்தும் எண்ணம் ஆளவந்தார்கட்கு அணுவளவும் இல்லை.

ஒரே இடத்தில், ஒரே விதமான விலைவாசிகள் உள்ள சூழ்நிலையில், கிட்டத்தட்ட ஒரேவிதமான வேலையைச் செய்பவர் இருவர்க்கு இரு வேறு
மான பஞ்சப்படி இன்
உள்ளது; டில்லி சர்க்
சென்னையில் உள்ள
அலுவலர்க்குத் தரும்
சப்படி பெரிது; சென்
சர்க்கார் அதே சென்
யில் உள்ள தம் அலுவ
குத் தரும் பஞ்சப்
சிறிது. இந்த ஏற்
தாழ்வு அநீதியான
தேவையில்லாதது; வி
விளைவுகட்கு இடமாவ
எனவே சென்னை சர்க்
—ஊழியர்கள் கேட்கா
டாலும் கூட—தம்
யர்க்குத் தரும் பஞ்
படியை டில்லி அரசிய
தரும் பஞ்சப்படி அ
ற்கு உயர்த்துவதே மு
ஆனால் சென்னை
காரோ, ஊழியர்கள்
டும் மீண்டும் வலியுறு
யுங் கூட, இந்த "ஒரு
கத்துக் கொரு நீதி"
மாற்றி அமைப்பத
தெரிய வில்லை. மா
அமைப்பதற்கான

## 'புது வாழ்வு'

[மாத வெளியீடு]

ஆசிரியர்:

**க. அன்பழகன் M. A.**

முதல் இதழ்

**14-1-48** பொங்கலன்

உள்நாடு வெ

தனி இதழ் அணா 4. "

ஆண்டுத்தொகை ரூபா 3. "

முன்பணம் கட்டக்கூடி

விற்பனையாளர்கள் தேவை

★

**புது வாழ்வு நிலையம்**

10 வேளாளர் தெரு

புரசைவாக்கம் சென்னை

போக்கோ அவர்க
உண்டு என்பதற்
அறிகுறி கூட அவர்
ம் காணப் படவில்லை.
ல் ஒன்று காணப்படு
அவர்களிடம்—ஐயந்
ற்கு இடமின்றி திட்ட
மாகக் காணப்படு
—எவரும் மறுத்துக்
தற்கோ மறந்து பேசு
கா இல்லாத வண்ணம்
த்தந் திருத்தமாகவே
ப்படுகிறது — அது
, உள்ளே வா அல்
வெளியே போ என்
அதிகாரக் குரல்!

கெ ஊதியமா—பேசக்
து. பஞ்சப்படி
வா—ஆகட்டும் பார்ப்
ம். சமாதானக்
ா — பேட்டி கிடை
வேலை நிறுத்தம்
றதா சங்கம்—அங்கி
கிடையாது அதற்கு
கடி அறிக்கை விடுக்
தலைவர் — விலக்கு
ர வேலையினின்று.
ர் அனைவரும் ஒன்று
முன்னணி அமைத்
போர்க்களக் காதை
க்கின்றனரா — குற்ற
த் தொடுப்போம்
கள் மேல் — இந்தத்
ணியில் பேசுகிறது
யாரின் ஆசியும் சம
லைகரின் கைலாகும்
காங்கிரஸ் இயக்கத்
அமைச்சர் குழு.

நியாயமில்லை.
நாட்டிலே மூண்டி
என். ஜி. ஓ.
ட்டத்தைத் தவிர்க்
றையும் இதுவல்ல.
நிறுத்தம் என்ற
ரூடரைக் கேட்ட
கையிற் கிடைத்த
களெல்லாம் என்

றன்பின் ஒன்றாக மடமட வென என். ஜி. ஓ. க்கள் மீது வீசுவது சிக்கலைத் தீர்க்காது—தீர்க்காது என்பது மட்டுமல்ல, சிக்கலை வளர்க்கும்; மேலும் மேலும் வளர்க்கும்; தீர்க்கவே முடியாத அளவுக்கு வளர்க்கும்.

144 எனும் பத்தாம்பசலி வெடிகுண்டை வீசுவதும், அடக்குமுறை பீரங்கியைக் கிளர்ச்சிக்காரர் பக்கம் திருப்புவதும், அவசர அவசரமாகப் புது ஆட்களை வேலைக்குத் தேடுவதும், கருங்காலிகட்கு எல்லா வகையான பாதுகாப்பும் உண்டு என்று வெளிப்படையாகவே முரசு கொட்டுவதும், டிஸ்மிஸ் — கபர்தார்.—பிடி சாபம் என்று பேசுவதும் கலகலத்துப் போன பழைய ஏகாதிபத்திய முறைகளே தவிர, ஆநந்த சுதந்தரம் அடைந்துவிட்டோமென்று திக்கெட்டும் பள்ளுப் பாடப்படும் இக் காலத்திற்கு ஏற்றன அல்ல.

என். ஜி. ஓ-க்கள் அரசாங்கம் என்னும் கட்டிடத்தின் அடிப்படை போன்றவர்கள். அவர்கள் வேலை நிறுத்தம் செய்கின்றனர் என்றால் ஆட்சிப் பீடம் அசைகிறது என்று பொருள்; அரசாங்க மாளிகையில் பூகம்பம் என்று பொருள்; சர்க்கார் இயந்திரத்தின் அச்சு முறிகிறது என்று பொருள். எனவே விபரீதம் ஏதும்நிகழா முன்னர், அரசியலார், உள்ளே வா அல்லது வெளியேபோ என்னும் தம் பழைய பல்லவியைச் சற்றே நிறுத்தி வைத்து, "விருப்ப முண்டேல் வேலை செய்க; இல்லையேல் டிஸ்மிஸ்—செல்க." என்றுரைக்கும் அதிகாரப் போக்கையும் கொஞ்சம் மாற்றிக் கொண்டு, அரசாங்க ஊழியரை அழைத்து, என்ன குறை, ஏன் வேலை நிறுத்தம் என்று கேட்டு அவர்தம் துயர்தனைக் களைய வேண்டுகிறோம்.

---


போர்வாள்

# பொங்கல் மலர்

பக்கம் 60 விலை அணா 8

தனிப்படி வேண்டுவோர் 0-9-0 தபால் தலை அனுப்பவும்.

சிறந்த கதைகள், கட்டுரைகள், கவிதைகள் கொண்டது.

அழகிய அமைப்புடையது.

விற்பனையாளர்கள் தேவையான படிகளுக்கு, படிக்கு 4 அணா வீதம் முன் பணம் அனுப்பிப் பதிந்து கொள்ளவும்.

சொற்ப படிகளே அச்சிடப் படுகின்றன. வேண்டுவோர் உள்ளூர் விற்பனையாளரிடமோ, அல்லது நேரில் எம்மிடமோ பதிந்துகொள்ளவும்.

"போர்வாள் நிலையம்"

147, பவழக்காரத் தெரு, சென்னை 1

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

முதுகெலும்பை முறிக்க வேண்டும் என்பதில் அவர்க்குள்ள துடி துடிப்பு, புனிதமான எண்ணங்கள் ஏற்பாடுகள்—தெய்வ தூதர்கள்—அவர்கள் 'நடத்திக் காட்டிய' அற்புதங்கள்—இவற்றின் மீது மக்களுக்குள்ள பிடிப்பு அகல வேண்டும் என்பதில் அவர்க்குள்ள உறுதி இத்தனையும் இங்கர்சாலிடமும் காணப்படும் பண்பாடுகள். இங்கர்சால், பெரியார் இருவரும் இரு வேறு நூற்றாண்டினர்; இரு வேறு நாட்டினர்; இரு வேறு மொழியினர்—ஆனால் ஒத்த உள்ளம் படைத்தவர்கள். பகுத்தறிவுப் பணி!—அது இருவரையும் ஒன்று சேர்க்கிறது.

மதம் எனும் பலிபீடத்தில் மக்கட் சமுதாயம் சாய்க்கப்படும் கொடுமையை எதிர்த்து அறப்போர் புரிந்த இங்கர்சால் ஒரு பாதிரியின் மகன்! தந்தை, மத போதனையை மக்களுக்கு ஊட்டி ஊட்டிக் களித்தார். மகன், மதத்தால் விளையும் அநீதிகளை மக்கள் மன்றத்தில் எடுத்தெடுத் துரைத்தார். மக்கள் திகைத்தனர் முதலில்; வியந்தனர் பின்பு. கொதிப்பும் கோபமும் கொண்டனர் பலர். இது அடுக்குமா என்று கேட்டவர்கள் எத்தனையோ பேர். மாதா கோயில் பாதிரிக்கா இந்த மாபாதகன் பிறக்க வேண்டும் என்று தம்மையே தாம் சலித்துக்கொண்டவரும் உண்டு. பாவி! நாஸ்திகன்! மதத்தைத் தூற்றுகின்ற தூர்த்தன்! ஏசுவைப் பழிக்கின்ற பித்தன்! வேத புத்தகத்தை நிந்தனை செய்யும் அகங்காரி! என்றெல்லாம் இங்கர்சாலை இழித்தும் பழித்தும் பேசியவர்கள் பல்லாயிரவர். புன்னகை பூத்த முகத்துடனே இவ்வசைமாரிகளை யெல்லாம் ஏற்றுக் கொண்டாரே தவிர, இங்கர்சால், தாம் கொண்ட கொள்கையினின்றும் அணுவளவும் பிறழ்ந்தாரில்லை.

எதிர்ப்பு பல்லாயிரம் வருமென்று தெரிந்தும், உள்ளத்தில் தோன்றியதை ஒளிக்காது உரைக்கும் நெஞ்சுவீறு இங்கர்சாலிடம் இயற்கையிலேயே அமைந்து கிடந்தது. இல்லையென்றால் மதப்பற்று மக்கள் உள்ளத்தில் நீக்கமற நிறைந்திருந்த அந்தக் காலத்திலேயே அவர் அத்தனை தைரியமாகவும் அவ்வளவு வெளிப்படையாகவும் மதமெனும் பலம் பொருந்திய இருப்புக் கோட்டை மீது மடமடவென வெடிகுண்டுகளை வீசினரே, அது நடந்திருக்கக் கூடிய நிகழ்ச்சியா? அமெரிக்க மக்கள் உள்ளத்தில் சிந்தனைப் பசியை அதி தீவிரமாக எழுப்பினரே, அதுதான் இயல்வதா?

நெடுங்கால உறக்கத்தில் ஆழ்ந்து கிடந்த தமிழ் மக்களைத் தட்டி எழுப்பி பகுத்தறிவுப் பாதை நோக்கிச் "செல்க" எனச் செலுத்திய பெருமை எப்படி பெரியார் ஈ. வெ. ரா.வின் தனி உடைமையோ அப்படித்தான் அமெரிக்க மக்களைச் சிந்திக்கவைத்த பெருமை இங்கர்சாலுக்கே உண்டு.

இங்கர்சால் 1833-ல் பிறந்தார், 1899-ல் மறைந்தார். வாழ்ந்த 66 ஆண்டுகளில் பெரும் பகுதியை, ஆயிரமாயிரம் ஆண்டுகளாக மக்கள் உள்ளத்தை ஆண்டுவந்த போலித் தத்துவங்களையும், அறிவைச் சிதைக்கும் குருட்டு எண்ணங்களையும் வெட்டி வீழ்த்துவதிலேயே செலவிட்டார்.

சிறுவன் இங்கர்சால் காற்றோட்டமுள்ள வெட்ட வெளிகளிலே தன் விருப்பம்போல அலைந்து திரிவான். மரங்களையும் மாநதிகளையும் கண்டு கண்டு களிப்பான். கனி குலுங்கும் சோலைகளும், வரிசை வரிசையாக உள்ள வயல் வெளிகளும், கவிபாடிக் கவி பாடிக் காலங் கழிக்கும் வானம்பாடிகளும் அவன் உள்ளத்தைப் பெரிதும் ஈர்த்தன. கட்டற்ற விடுதலை வாழ்விலே அவன் துள்ளிக் குதித்தான், ஓடினன், ஆடினன், துடுக்குடைய பிள்ளை என்று பேர் எடுத்தான். எதற்கும் எவர்க்கும் பணியாதவன் என்று அண்டை அயலார் கூறும் அளவுக்கு அவன் "தனக்குத்தான் தலைவன்" ஆயினன்.

இந்தப் 'போக்கிரிக் குழந்தை' பள்ளிக்கூடம் சென்று வாத்தியாருக்கு அடங்கியிருந்து கல்வி கற்றுக்கொள்ளாததில் வியப்பொன்றுமில்லை. ஏதோ பெற்றோர் கொடுத்த ஓரளவு கல்வியே அவருடைய பிற்கால ஆராய்ச்சிகளுக்கு மூலதனமாயிருந்தது.

இங்கர்சால் கல்லூரி மண்டபத்தைக் கண்டதில்லைதான். ஆனால் அதனை அவருடைய இலாப
க்கில் சேர்க்கவேண்டுமே
நஷ்டக் கணக்கில் சேர
கில்லை. ஏனெனில் அவ
முறை கூறியிருப்பதுபோ
ழூரிகள், ஓட்டைக் கிளிஞ்சல்
மெருகு தீட்டுகின்றனவே
உண்மை வைரங்களை ஒளி
மடிதரனே செய்துவிடுகின்றன

இங்கர்சால் கல்லூரிக்
பெற்றிருந்தால் என்ன நட
கும்? அவரும் ஒரு பட்டத
மாறி இருப்பார். இரவில்
தைப் பகலில் ஒப்பிக்கும் இ
மாக இருந்திருப்பார்.
தலை சிறந்த இயந்திரமாக
இருந்திருப்பார். ஆனால்
தடங்கலின்றி எதனையும்
மாகச் சிந்தித்து முடிவு
பகுத்தறிவுப் பண்பை மக்
ஊட்டும் சிந்தனைச் சிற்
அவர் இருந்திருக்க முடியும

இங்கர்சால் கல்விச்
சென்று கலைபல பயின்றில
னும் நுண்ணறிவும் கூர்த்
யும் இயல்பிலே வாய்
எனவே மூன்றே ஆண்
சட்டக் கலை பயின்று சிறந்
கறிஞராக விளங்கமுடிந்தத
ரால். அக் காலத்தில் சட்டக்
இந் நாளிற்போல இவ்வளவு
மானதாய் இல்லை என்றாலு
கர்சால் அதில் தேர்ந்த
தெளிந்த பயிற்சியும் பெ
காக இரவும் பகலும் ஓயாத
துக்கொண்டிருந்தார். சில
பங்களில், உண்டபின்,
படிக்கத் தொடங்கியவர்,
பதை நிறுத்திவிட்டு வெ
வந்து பார்த்தபோது பொ
விடிந்துவிட்டிருக்குமாம் —
ளவு ஓயாத படிப்பு!

இங்கர்சாலுக்கிருந்த இணை
வாதத்திறமை—பின்னே ம
களின் மமதையை மட்ட
அவருக்குக் கிடைத்த சிறந்
தம்—வெகு விரைவில்
அமெரிக்காவிலேயே ஈடு
யற்ற வழக்கறிஞர் என்று
லோரும் போற்றத்தக்க
உயர்த்திற்று. அவர் வழக்கு
கையாண்ட திறமை, அவ
சொல்லிலே இருந்த கவர்ச்சி
வேறு வகைப்பட்ட மனிதர்
உள்ளங்களையும் உணர்ச்
யும் அளந்தறிவதில் அவர்க்
ஆற்றல், ஜூரிகளைத்

தும் வசீகரம் இவற்றையெல்
ண்டு கண்டு அவரை எதிர்த்
பேசவந்த வழக்கறிஞர்கள்
ங்கிப்போவது வழக்கமாம்.
ஆண்டுகளில் இங்கர்சால்
றிஞர் துறையில் பெரும்
பெற்றுவிட்டார். பின்னே
க்கப் பட்டாளத்திலும்
, படைத் தளபதிகளில்
ாக இருந்து, அரிய பணி
ருக்கிறார்.

ல் இங்கர்சாலின் தனிச்
அவருடைய பேச்சுக்
. அவருடைய பேச்சு ஒவ்
றும் ஒரு வசன காவியம்;
ஓரோவியம். அவர் பேசிக்
டிருக்கும்போது அடுக்
டர்கள் ஒன்றையொன்று
க் கொண்டு உருண்டோடி
ற அழகும், சொற்கள் அங்
ங்கும் ஓடி ஓடி செய்து காட்
ாத நாட்டியமும், எண்ண
ள் எழுந்து மடிந்து வீழ்ந்து
பாய்ந்து பொலிவுறும்
ம், இடையிடையே எதுகை
க் கிள்ளைகள் வந்து நம்
கொஞ்சிக் குலவும் அருமை
டே அப்பா, என்ன அழகு!
அழகு!

பேசும்போது, நம் மனக்
முன்னே, மலையினின்று
டின்றிப் பெருக் கெடுத்
அருவியின் காட்சி தோன்
தம் இனிய குயிலது பாடும்
ம் தெரியும்; காற்றிலே
கசைந்து நீந்திய வண்ணம்
பாடி அமுதப் பண்ணினை
இறைத்திடும் அருமை தெரி
தெள்ளு தமிழில் இசைத்
பிழிந்தெடுத்துத் தின்னத்
தெவிட்டாத தன்மை
. ஆம்! அழகின் சிரிப்பும்,
யின் எழிலும், காதலின்
, இசையின் இனிமையும்
ள்ளத்திற் புகுந்து புகுந்து
புதுநடம் புரியும்.

பேச்சிலே இனிமையும்
அருமையும் தெளிவும்
இருக்கும்? இல்லை! அறி
ம்; எதனையும் ஆராய்ந்து
ம் திறம் இருக்கும்; குருட்டு
கையை இடித்துக் காட்டும்
பண்பிருக்கும்; அழியாத
த்தை ஏட்டில் அழகாக
டும் பழிகாரர் தம்மை
ந்த பாவலர் என்பார்தம்
குச் சாட்டையடி இருக்

கும். ஏன் என்ற கேள்வி, எதற்காக என்ற ஆராய்ச்சி, எப்போது என்ற ஐயம், எதனால் என்ற எண்ணம், யாருக்காக என்ற சிந்தனை— எல்லாம் இருக்கும்.

ஆம்! அழகின் சிரிப்பு, அறிவின் எல்லை இரண்டும் காணப்படும் அவர் பேச்சில். ஆனால் அறிவின் எல்லையில் அழகின் சிரிப்புப் பிறந்ததோ, அன்றி, அழகின் சிரிப்பில் அறிவின் எல்லை அமைந்ததோ என்பதுதான் தெரியக் கூடவில்லை.

அவருடைய பேச்சுகள் அத்தனையும் அவர்தம் உள்ளத்தின் உள்ளிருந்து எழுந்த இதய ஒலிகள் மட்டு மல்ல; மக்கட் சமுதாயத்தைச் செல்லரித்துத் தின்று வரும் பழங்காலக் கரையான்களுக்குத் தரப்பட்ட கசையடிகளுமாகும். எனவேதான் அவருடைய சொற்பொழிவுகளிலே— அவை உண்மையிலேயே சொற்பொழிவுகள் தாம்—தித்திப்பு மட்டு மல்ல, காரமும் இருந்தது; தித்திப்புச் சுவையை மறைக்கும் அளவுக்கு இருந்தது. இருக்கத்தானே வேண்டும்! இல்லை யென்றால் மனித இனம் மதமெனும் சிறைக் கூண்டிலிருந்து விடுபடுவது எப்படி?

அவர் பேச்சின் உள்ளுறையை மக்கள் மத போதையின் காரணமாக வெறுத்தனர் எனினும் அதன் சுவை நலத்தை மிகவும் விரும்பினர். அவர் பேசுகிறார் என்றால் கூட்டம் பெருங்கூட்டமாகும்; மாபெருங்கூட்டமாகும். மக்கள் திரள் திரளாய்த் திரண்டு கூடுவர் அவர்தம் சொற்சுவை நுகர. அவர்தம் பேச்சில் மக்கட்கிருந்த ஆர்வம் பணம் கொடுத்தும் அவர் பேச்சைக் கேட்கத் தூண்டிற்று. அவருடைய பேச்சுகளின் மூலம்— புரட்சிப் பேச்சுகளின் மூலம்— ஆம், மத எதிர்ப்புப் பேச்சுகளின் மூலம் அவர் பெற்ற ஊதியம் அமெரிக்கக் குடியாட்சித் தலைவர் ஊதியத்தினும் இரண்டு மடங்கு பெரிது எனில் அவர்தம் சொல்லாற்றலுக்கிருந்த சிறப்பைச் சொல்லவும் வேண்டுமோ?

“நாஸ்திகர் உள்ளமா! அது வெறும் பாலைவனம்!” என்று சில ஆஸ்திக அறிஞர்கள் கூறுவதுண்டு. அது எவ்வளவு பொய்யான கூற்று என்பதை இங்கர்சாலின் வாழ்க்கை நமக்குத் தெள்ளத் தெளிய உணர்த்துகிறது.

இங்கர்சால் குழந்தை உள்ளம் படைத்தவர். என்றும் எவர்க்கும் மறந்தும் ஊறுதேட நினையாத மாண்புடையவர். எந் நிலையிலும் எதனையும்—அது வேத புத்தகமாயினும் ஆக; ஆண்டவன் கட்டளை ஆயினும் ஆக—தன் உள்ளம் உண்மையென உணர்ந்து உரையாதவற்றை ஒப்புதல் கூடாது என்னும் உறுதி படைத்தவர். நீதியை நிலைநாட்டுவதில் ஆர்வம், உரிமை உணர்வில் அடங்காத வேட்கை, சமுதாய முற்போக்கைத் தடை செய்யும் சக்திகளைச் சாய்ப்பதிலே முனைப்பு—இவை அவருடைய பிறவிப் பண்புகள். அவருடைய கண்களிலே அன்பு ததும்பும். அவருடைய உரையாடலிலே தைரியம், மகிழ்ச்சி, எக்காளம், குறும்பு இவையெல்லாம் காணப்படும். அவருடைய சீர்திருத்தக் கருத்துக்கள் எல்லோரும் விரும்பி ஏற்றற்குரியனவாய் இல்லாமல் இருக்க



லாம். ஆனால் அவருடைய அஞ்சாமையையும், ஆற்றலையும், எதற்கும் ஈடுகொடுத்துப் போராடும்பெரு வீரத்தையும் எவரும் போற்றிப் புகழாமல் இருத்தல் இயலாது.

அவர் ஏராளமாய்ப் பொருள் ஈட்டினரே தவிர அதனைச் சேர்த்து வைக்கும் எண்ணம் அவர்க்குத் துளியும் இருந்ததில்லை. வறுமைக் கொடுமையால் வாடிய எத்தனையோ குடும்பங்களை அவர் காப்பாற்றி இருக்கிறார். வாழும் வழியின்றி பாலைநிலத்திலே கிடந்து வாடிய பலரை அவர் வாழ்க்கை வளத் தோட்டத்திற்கு அழைத்துச் சென்றிருக்கிறார்-தன் துணை எனும் ஊன்றுகோல் கொடுத்து. நான்கு குடும்பங்கள் நிலையாகவே அவர் நிழலில் தங்கிவிட்டன.

அவருடைய இல்லம் ஓர் அன்பு நிலையம். அங்கே புன்னகை உண்டு—பெருமூச்சு இல்லை; சிரிப்பும் களிப்பும் உண்டு—அழுகையும் துக்கமும் இல்லை; இரக்கமும் நகையும் உண்டு—சிடுசிடுப்பும் பொச்சரிப்பும் இல்லை.

நல்ல குடும்பம் ஒரு பல்கலைக் கழகம் என்கிறார் கவிஞர் பாரதிதாசன். இங்கர்சாலின் குடும்பம் ஒரு பல்கலைக் கழகம் மட்டுமல்ல, ஒரு பகுத்தறிவுப் பாசறையுமாகும்.

இங்கர்சால், மரணத்தை நினைத்துத் துளியும் வருந்தியதில்லை. ஓயாத வாழ்க்கைக்குப் பிறகு நீங்காத உறக்கம் ஒன்று வேண்டியதுதான் என்பது அவர் கருத்து. தொடர்ந்து வரும் மகிழ்ச்சி அலைகளுக்கு அடுத்தபடி, நாம் காதல் கொள்பவரோடும் நம்மைக் காதலிக்கும் பண்பினரோடும் நீங்காது உடன் உறையும் இன்பத்திற்கடுத்தபடி, பரந்த உலகத்தின் நிறைந்த அமைதியில் இரண்டறக் கலந்துவிடுவதே தனக்கு இனிய தன்மை என்று அவர் சொல்லிவந்தார். அவர் முடிவெய்திய முறையும் அதற்கேற்பவே இருந்தது. நாற்காலியில் நிமிர்ந்து உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தவர் எனக்கு என்னவோபோலிருக்கிறது என்று சொன்னவண்ணம் சாய்ந்து உட்கார்ந்தார். அவ்வளவில் அவர் உயிர் பிரிந்தது. என்ன அமைதியான முடிவு!

இங்கர்சால் வாழ்க்கையின் மூல மந்திரம் உண்மை உண்மை உண்மை என்பதே. இந்த உலக வாழ்விலேயே இன்பத்தின் எல்லை உண்டு என்பது அவருடைய திட்டமான முடிபு. மறு உலகம் ஒன்று உண்டு என்பதை அவர் நம்ப மறுத்தார். தலைவிதி தத்துவத்தையும் மோட்ச நரக எண்ணங்களையும் எள்ளி நகையாடினர். மதம் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை என்பதை அழகான முறையில்—அருமையான நடையில் எடுத்துக் கூறிவந்தார். விஞ்ஞானமே விடுதலை வீரன்; வாழ்வின் வழி காட்டி; மனித சமுதாயத்தின் கலங்கரை விளக்கம் என்பதை அமெரிக்க மக்களுக்கு அறிவுறுத்தினர். புனித நூற்கள் தடுத்தாலும் சரி, புரோகிதர் கூட்டம் தடுத்தாலும்சரி, மாதாகோயில்கள் தடுத்தாலும் சரி, மதபோதனைகள் தடுத்தாலும் சரி, அத்தனை தடைகளையும் மீறிக்கொண்டு, தனக்குத்தானே சிந்தித்துப் பார்க்க ஒவ்வொரு மனிதனுக்கும் உரிமை உண்டு என்பதை அழுத்தந் திருத்தமாகக் கூறிவந்தார். நரக பயத்தின் முன்னே நடுங்கிக் கிடந்த அமெரிக்க மக்களை அழைத்துவந்து உள்ளதை உள்ளபடி சித்தரித்துக் காட்டி, "நடுக்கமும் பயமும் ஏதுக்கு? அஞ்சி ஒதுங்குதல் எதற்காக' என்று கேட்டார். சுருக்கமாகச் சொல்வதானால், மனித உணர்ச்சி எனும் வீணைத் தந்திகளை மீட்டி, தன் சொற்கள் எனும் சுரபேதத்தால், பகுத்தறிவாகிய சங்கீத அலைகளை அற்புதமாகப் பரப்பிவந்தார் அவர். அந்த அலைகள் சென்று சென்று மனித உள்ளம் எனும் கரையிலே மோதின; முட்டின; எழுந்தன; வீழ்ந்தன; அங்கே ஓர் நிலையான மாற்றத்தை உண்டுபண்ணி விட்டன.

'இங்கர்சால் ஒரு சிந்தனைச் சிற்பி—அறிவாளர் உலகத்திற்கு; ஒரு வெடிகுண்டு—வைதீக வட்டாரத்திற்கு; நல்லதோர் வழிகாட்டி—இளைஞர்க்கும் மாணவர்க்கும்.

இங்கர்சால் என்பதும் ஈ.வெ.ரா, என்பதும் ஒரு பொருள் குறிக்கும் இரு வேறு சொற்களே. பகுத்தறிவு என்பதே அந்தப் பொருள்.

---

(12-ம் பக்கத் தொடர்

உள்ளபடியே பாரதி
பாடல் ஒவ்வொன்றும்
போர் வாள் தமிழனுக்கு.
பாடல் தொகுதி தமிழ
ஒரு பாசறை.

'உலகத்தில் மதம்
தும், சாதி சேர்த்தும், உ
தாழ்வினைச் செய்தும், ச
கண்டும் கலகத்தை ந
கின்ற அந்தத் தீய இருள
மீது தன் வீர வாளை ஓச்
டார் நம் போர் வீரர்
தாசன்.

ஆம், ஊரிலேனும் நாட்
னும் உலகிலேனும எழுப்ப
டுள்ள சூழ்ச்சித் திரைகள்
தனையையும் தாள் தாள
கிழித்தெறியப் போர்
கொட்டிவிட்டார். புரட்சி
பாசறை அமைத்துவிட்
போர்ப் பாட்டும் இசைத்த
டார். போர் வாளும்
ரித்துவிட்டார். தமிழர்
அழைக்கிறார் வருக வருக
தமிழ் நாடே! நீ என்ன
லப் போகிறாய் அந்தக் க
குரலுக்கு!

---


# போர்வாள்

திராவிடர் வார வெளி

உள் நாடு வெ

தனி இதழ் ரூ. 0 1 6 0
ஆண்டு 1-க்கு 5 0 0 6
6 மாதங்கட்கு 2 8 0 3

போர் வாள்,
பவழக்காரத் தெரு, சே

# ...திதாசன்—பிறவிப் போர்வீரர்!

[காஞ்சி. மணிமொழியார்]

...ற நெற்றி, அடர்ந்த
...செம்மாந்த நோக்கு,
...று போன்ற தோற்றம்,
...ான உருவம், கழுத்தில்
...கொண்ட ஒரு நீண்ட
...இத்தனையும் படைத்த
... பாரதிதாசன்.

...றைபதினம் தமிழன்
...யில் பாரதிதாசன் என்
...ரட்சி என்று பொருள்.
...என்றால் பாரதிதாசன்
...பொருள், பாரதிதாசன்
... புரட்சி வேறு என்று
...லே நாட்டாருடைய
...தமிழனும் இன்று கரு
...ல்லை. எப்படித்தான்
...டியும்? பாரதிதாசனை-
...சனின் பகுத்தறிவுக்
...-தமிழ்த் தேனில் புர
...மொழிகளைத் தோய்த்
... அள்ளி வீசுகின்ற
...அஞ்சாத நெஞ்சத்தை-
...ர்கள் அத்தனைபேரும்
...காண்டே தீர வேண்டும்
...ன் வேறு பெயர் பாரதி
...ன்பதை.

...க்கு வால்டேர் என்று
...; ஷெல்லி என்று
...; வால்ட் விட்மன்
...பொருள்; காரல் மார்க்ஸ்
...பொருள்; பாரதிதாசன்
... பொருள்.

...ருக்குப் பாரதிதாசன்
...தென்றல் அல்ல; போர்
...தேன் அல்ல-புரட்சி
...சிரித்து விளையாடும் சிற்
...ல்ல; சுழன்று சுழன்று
...ம் சண்டமாருதம். ஒரே
...த்தில் சொல்ல வேண்டு
... இயற்கை இன்பத்தை
...ாடி அத்துடன் திருப்தி
... விடுகின்ற சோம்பே
... அல்ல பாரதிதாசன்-
...ு புரட்சிக் கவி. புரட்சியை வரவேற்கும் கவி மட்டுமல்ல; புரட்சியே உருவான கவி.

ஆம்! பாரதிதாசன் புரட்சியே உருவான கவி. அதில் சிறிதும் ஐயமில்லை. அவருடைய எழுத்தில், பேச்சில், சொல்லில், சொற்றொடரில், எண்ணத்தில், அதன் வெளிப்பாட்டில், கொள்கையில், கோட்பாட்டில், அத்தனையிலும் புரட்சி வாடை வீசுகிறது. கலைத்துறை யாகட்டும், மத இயலாகட்டும், சமுதாய வாழ்வாகட்டும், பொருளாதார அமைப்பாகட்டும், ஒவ்வொரு துறையிலும் அவர் கொண்டுள்ள கருத்து, அடே அப்பா, அதி தீவிரப் புரட்சி வாதிகளையும் கலங்கவைக்கும் அவ்வளவு புரட்சிகரமானவை.

கலையா-இனக் கொலையில் முடிவதாயின் கலையைக் கொலை செய் என்கிறார் பாரதிதாசன்; மதமா—அது மக்கள்தம் முன்னேற்றத்தைத் தின்னவந்த காட்டுத் தீ என்கிறார் அவர். சாதி பேதமா-சுட்டுப் பொசுக்கு அதனை என்பது அவர் முழக்கம். தமிழிலே சமயக் கலப்பு ஆகுமோ என்றால், அது பாலிலே நஞ்சைக் கலப்பதல்லவோ என்று கேட்டுவிட்டு, தமிழ் ஒளியை மதங்களிலே சாயக்காமை வேண்டும் என்று தீர்ப்பளிக்கிறார் பாரதிதாசன். வேத புராண இதிகாச உலகம், சூது நிறைந்த துட்ட உலகு என்பது அவர் கருத்து.

தமிழர் சமுதாயம் தலைநிமிர்ந்து வாழ வேண்டுமானால்-பிற நாட்டார் முன்னிலையில் தமிழ் நாட்டார் செம்மாந்து செல்லும் நிலை ஏற்பட வேண்டுமானால்-மண்ணன்று நானுமோர் மனிதன் என்னும் தன்மான உணர்ச்சி தமிழர் உள்ளந்தோறும் குதித்தெழ வேண்டுமானால்-தமிழன் ஆட்டும் சுட்டுவிரல் கண்டு ஆடிற்று வையம் என்று கேட்டு நாம் இன்ப ஊற்றுக் கேணியிற் குளிக்க வேண்டுமானால் கட்டாயம் பாரதிதாசன் பாடல் தமிழ் நாடு முழுதும், பட்டிதொட்டி முழுதும், சிற்றூர் பேரூர் முழுதும் முழங்க வேண்டும், முழங்கித்தானாக வேண்டும். உள்ளபடியே வீழ்ச்சியுற்ற தமிழகத்தை எழுப்பும் உயிர்ப்பாற்றல் பாரதிதாசன் பாடலுக்கு உண்டு-பாரதிதாசன் பாடலுக்குத்தான் உண்டு.

இன்றைய சமுதாயத்தையே தலைகீழாக மாற்றி அமைத்து மறுகோலம் செய்ய வேண்டுமென்பது பாரதிதாசன் இலட்சியம்.

ஆகவே அவர், 'இக் கொலை உலகம் கோணல் உலகம் மிகத் தாழ்ந்த புலை உலகத்தை விட்டு அகன்று அவருக்கு விருப்பமான இலட்சிய மாளிகைக்குச் சென்று புதியதோர் உலகம் பற்றிய கனவு கண்டுகொண்டிருக்கிறார் கனவு காண்பது மட்டுமல்ல; அந்தப் புது உலகத்தை நடைமுறையிற் கொண்டு வர அதிதீவிரப் பிரசாரமும் செய்து வருகிறார்.

அவர் கனவு காணும் உலகத்தில் ஒடப்பரும் இல்லை, உயரப்பரும் இல்லை, எங்கும் ஒப்பப்பரே உண்டு.

அங்கே ஒட்டைக் குடிசைகளில்லை; ஒடிந்த உள்ளங்கள் இல்லை; தாழ்ந்த தலைகளும் கவிழ்ந்த முகங்களுமில்லை. நாளை வாழ்வுக்கு என் செய்வோம் என்று எண்ணி ஏங்கும் ஏழைத் தன்மை இல்லை.

அந்த உலகத்தில் இது எனது என்னுமோர் கொடுமை இல்லை, தனி உடைமை இல்லை, நன்

வாழ்வு மட்டும் தழைத்தால் போதும் என்றெண்ணும் குறுகிய மனப்பான்மை இல்லை.

தன் பெண்டு, தன் பிள்ளை, சோறு, வீடு, சம்பாத்தியம், இவையுண்டு, தானுண்டு என்னும் சின்னதொரு கடுகுபோலும் உள்ளம் கொண்ட பயனற்ற வீணர் அங்குக் கிடையாது. கன்னலடா என் சிற்றூர் என்று சொல்லும் கடுகுக்கு நேர் மூத்தவரை உள்ளமும் அங்கில்லை. தன் நாட்டுச் சுதந்தரத்தால் பிற நாட்டைத் துன்புறுத்தும் தொன்மை உள்ளமும் அங்கில்லை. 'மானிட சமுத்திரம் நானென்று கூவும் விசாலப் பார்வை' மட்டுமே அங்குண்டு.

அந்த உலகத்தில் மதம் இல்லை, அதை வளர்க்கும் மூட நம்பிக்கை இல்லை, அந் நம்பிக்கையின் அடிப்பிறந்த சடங்குகள் இல்லை, இம் மூன்றை நிலைக்கவைக்கும் சாத்திரக் குப்பையுமில்லை.

அந்த உலகத்தில் ஆழ்வார்களோ நாயன்மார்களோ ஜீயர்களோ ஜீவன் முத்தர்களோ கிடையாது. ஊரை-உலகை ஆட்டிப் படைக்கும் புரோகிதப் புரட்டர் கூட்டமும் கிடையாது.

அங்கே அறிவின் விளக்கமுண்டு; அதை அடக்கி வைக்கும் புராணமில்லை. விஞ்ஞான வளர்ச்சியுண்டு; அதற்குத் தடைவிதிக்கும் குள்ள நரிக் கூட்டமில்லை. ஆராய்ச்சி உண்டு; அதைவளர்க்கும் திட்டமுண்டு; மக்கட் கெல்லாம் 'ஆராய்ந்து பார்' என்று சொல்லும் பகுத்தறிவு மன்றங்களுண்டு; ஆனால் பிழைபட்ட கருத்தைக் காட்டி, 'இதுதான் வேத ஒலி—நம்பித்தான் ஆகவேண்டும்' என்று சொல்லும் ஓட்டாரமில்லை.

பாரதிதாசன் உலகத்தில் நரகமும் இல்லை—மோட்சமும் இல்லை. பாபிகளும் இல்லை—புண்ணியவான்களும் இல்லை. தேவ தூதர்களும் இல்லை—அவர்களுக்கு அஞ்சி வாழும் ஆமை உள்ளத்தவரும் இல்லை. அந்த உலகத்தில் உலவுவோர் அனைவரும் மக்கள்—அறிவின் எல்லையைக் கண்டு வாழும் மக்கள்.

அங்கே கொடுங்கோல் கிடையாது. மக்கள் ஆட்சி மலர்வதைத் தடுக்கும் மமதையாளர் கிடையாது. ஊரார் உழைப்பில் உண்டு வாழும் உலுத்தர் கிடையாது. 'பகுத்தறிவே! நீ பரவாதே' என்று சொல்லும் மதோன்மத்தர் கிடையாது. உலகம் உண்ண உண்டு, உலகம் உடுத்த உடுக்கும் பொதுவுடைமை உள்ளங்கள் மட்டுமே அங்குண்டு.

சுருங்கிய உள்ளம், குறுகிய இலட்சியம், இருண்ட வீடு, புனல் சொரியும் கண்கள், பொய் சொல்லும் வேதாந்தம், புரட்சிக்குத் தடை சொல்லும் புல்லறிவு—இவை யெல்லாம் பாரதி தாசன் உலகத்தில் கிடையா.

வீரம் ததும்பும் முகங்கள், ஒளி பொருந்திய கண்கள், உறுதி படைத்த கைகள், வலிமை கொண்ட தோள்கள், அஞ்சாத பெரு வீறு அமைந்த நெஞ்சங்கள்—இவற்றிற்கு மட்டுமே அந்த உலகத்தில் இடமுண்டு.

அறிவு, ஆராய்ச்சி, அநுபவம், சிந்தனை, செயல் திறம், சீர்திருத்தம், உறுதி, ஊக்கம், உழைப்பு, உற்சாகம், முற்போக்கு, கிளர்ச்சி, எழுச்சி, இவற்றிற்கு உறுதுணையான தன்மான உணர்ச்சி. இவற்றைத்தான் பாரதி தாசன் உலகத்தில் காணமுடியும். தலைவிதியை, முன் வினையை, அவன் - அருளை, அன்று எழுதிய எழுத்தை, கொடுத்துவைத்ததை, அதிர்ஷ்டத்தை இவற்றையெல்லாம் அங்கு
முடியாது.

அங்கே காதல் வா
பொருந்தா ம
மானிட சக்தியில் மட்
பிக்கை உண்டு; '
பொய்யே, பரமபதம்
என்னும் சாக்குருவி
இல்லை.

அந்த உலகம், அறிவு
அன்புலகம், புது
புரட்சி உலகம், தன்ம
கம், இன்ப உலகம்,
காவலற்ற கருத்து
வெறும் எதுகை மோ
மல்ல, அந்த உலகத்
ப்பதுதான் பாரதி
இலட்சியம்.

அதன் அமைப்புக்கு
விதிக்கும் எதிர்ப்புச்
அத்தனையையும் தெ
எதிர் நிறுத்தித் து
கும் காழ்ச்சிந்தை ம
கள் மிகவும் கொண்
புரட்சிக் கவிஞர் பாரதி

பாரதி தாசன் ஒரு
போர் வீரர். எங்கெ
யாமை இருக்கிறதோ
கெங்கே ஆணவம்
றதோ, எங்கெங்கே '
தாழ்வு' மனப்பான்
கட்டிலில் அமர்ந்
எந்தெந்த இனம் எ
பிறர் உழைப்பை உறி
ஞுகிறதோ, அங்
பாரதி தாசனின் போ
கம் உண்டு. எங்கெ
சிக்கும் வீரத்திற்கும்
நிகழ்கிறதோ அங்கெ
வீரத்தின் பக்கம் நின்
டும் அவருடைய போ
உண்டு அதனுடைய
உண்டு. அவருடைய
வாள் வெறும் தங்க
த்த பொம்மை வா
உயிர்ப்பாற்றல் நிறை
ர்ச்சி வேகம் செறி
கூரிய வாள் அது.

(10-ம் பக்கம் பா